1979 பிப்ரவரி 26]

நல்லது. அப்படி ஒரு முறையை ஏற்படுத்தினால் ஜாதி வித்தியாசம் ஏற்படாது. ஆகவே இது பற்றி அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் எதிர் காலத்தில் அவரது பிரச்சனைக்கு தொடர்பு ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர் அருகே இரயில்வே பாலம்.

* வினா எண் 191—திரு. கு. வடிவேல : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரூரில் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ன் குறுக்கே இருக்கின்ற இரயில்வே பாதையில் மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. கு. வடிவேல : கரூருக்கு அருகாமையில் திருச்சியிலிருந்து கரூர் வரையில் இருக்கக்கூடிய ரெயில்வேப்பாதையில் பல மாநிலச் சாலைகள், தேசியச் சாலைகள் குறுக்கிடுகின்றன. கரூரில் தேசிய நெடுஞ்சாலை குறுக்கிடும் இடத்தில் ரெயில்வேகேட் மூடப்படும் போது போக்குவரத்திற்கு பெரிதும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே அதுபற்றி அரசு ஒரு முடிவெடுத்து அங்கு ஒரு மேம்பாலமோ அல்லது கீழ்பாலமோ கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்திலுள்ள லெவல் க்ராஸிங்கை அகலப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அந்தவிடத்தில் கட்டுவதற்கு அரசாங்கத்தினிடம் இப்போது பரிசீலனையில் இல்லை. ஆனால் கரூர் நகரத்திற்கு புறவழிச் சாலையில், தேசியச் சாலையில் ஒரு மேம்பாலம் சேர்க்கப்பட்டு மதிப்பீடு மத்திய அரசுக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.